## வளர்நிலை - 5

## என்மீது அன்பு செலுத்துபவர்

நான் ஆறாம் வகுப்புப் படித்துவரும் மாணவன். என்னுடன் பயில்கிறவன், நாவலன்; என் ஆருயிர் நண்பன்; என்மீது அளவற்ற அன்பு செலுத்துபவன்; ஒழுக்கத்தை உயிரினும் மேலாய் மதிப்பவன்.

நாவலனும் நானும் ஒன்றாம் வகுப்புமுதல் இன்றுவரை ஒன்றாகவே பயின்று கொண்டிருக்கிறோம். என் வீட்டிற்கு அருகே அவன் வீடும் உள்ளது. பள்ளிக்கு வரும்போது நாங்கள் இருவரும் சேர்ந்தே வருவோம். வீடு திரும்பும்போதும் சேர்ந்தே செல்வோம். ஆசிரியர் நடத்திய பாடங்களை அன்றைய தினமே படித்துவிடுவோம். நாவலன் தன் சந்தேகங்களை என்னிடம் கேட்டுத் தெரிந்துகொள்வான். நான் வகுப்பில் நன்றாய்ப் படிக்கும் மாணவன். ஆதலால், எல்லாத் தேர்விலும் நான்தான் முதல் மதிப்பெண் பெறுவேன்! நாவலன் இரண்டாம் இடம் பெறுவான். இளவயதுமுதல் என்னுடன் சேர்ந்து பயின்று கொண்டிருப்பதால்தான், படிப்பில் தானும் சிறந்து விளங்குவதாய் நாவலன் அடிக்கடி கூறுவான்.

ஒருநாள், அவசரமாய்ப் பள்ளிக்குப் புறப்படும்போது கால்தவறி கீழே வீழ்ந்துவிட்டேன். காலில் சற்றே எலும்பு முறிவு ஏற்பட்டது. ஆனால், என்னால் பொறுத்துக்கொள்ள முடியாத அளவு வலி உண்டானது. என் பெற்றோர், மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றனர். அங்கு எனக்கு மாவுக் கட்டுப் போடப்பட்டது. அப்பொழுது அரையாண்டுத் தேர்வு நேரம். தேர்வுக்கு நான் செல்ல முடியவில்லை. என் நண்பன் நாவலன் அடைந்த துன்பத்திற்கு அளவே இல்லை. நாள்தோறும் என்னைப் பார்க்க வருவான்; கண்ணீர் விட்டு அழுவான். நான் அவனுக்கு ஆறுதல் கூறிப் பள்ளிக்கு அனுப்புவேன்.

‘நமக்கு வரும் துன்பத்திலும் ஒரு வகை நன்மை உண்டு. **அத்துன்பம் நம் நண்பரை அளந்து பார்க்கப் பயன்படும் அளவு கோலாகும்**’ என்பார், வள்ளுவர். நீங்களே சொல்லுங்கள், நாவலன் என்மீது அளவற்ற அன்பு கொண்டவன் என்பது உண்மைதானே!

நன்றி,
வணக்கம்